பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆனி 28 ஷவ்வா 23 இதழ் 152
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 12-7-1985

—மாகாண-மாவட்ட அதிகாரப்பொறுப்பு—

## அரசு யோசனையை அனைத்து தமிழ்க்குழுக்களும் நிராகரிப்பு

(திம்பு)

''மாகாண, மாவட்ட அலுவலகங்களில் அதிகாரப் பொறுப்பு வழங்கலாம்'' என்று இனப்பிரச்னை குறித்து பூட்டானில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் இலங்கை அரசு தரப்பு குழுவினரால் வைக்கப்பட்ட யோசனையைத் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும், தமிழ்த் தீவிரவாதக் குழுக்களும் முழுமையாக நிராகரித்துள்ளன.

கடந்த ஆண்டு கொழும்பில் நடைபெற்ற அனைத்துக்கட்சி மாநாட்டின் இறுதியில் ஜனாதிபதி ஜே. ஆர் ஜயவர்த்தனவினால் வைக்கப்பட்ட பழைய யோசனைகளில் இதுவும் ஒன்று என்று பேச்சுவார்த்தையின் போது தெரிவித்த தீவிரவாதக் குழுக்கள், இந்த யோசனைகள் தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளைச் சற்றும் பூர்த்திசெய்யவில்லை என்றும்; தமிழர்கள் இந்த யோசனையை ஏற்கனவே நிராகரித்துவிட்டதாகவும் தெரிவித்தார்கள்.

(7-ம் பக்கம் பார்க்க)

பழைய பாராளுமன்றத்தைத் தகர்த்து—

# ஜனாதிபதியை கொலைசெய்யும் சதிமுயற்சி தோல்வி!

## இருவர் கைது; வெடிப்பொருட்களும் சிக்கின!

(கொழும்பு)

**பழைய பாராளுமன்றக் கட்டிடமான தற்போதைய ஜனாதிபதி செயலகத்தைக் குண்டு வைத்துத் தகர்த்து ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவை கொலை செய்வதற்கு எடுக்கப்பட்ட சதி முயற்சி நேற்றுக் காலை கொட்டாஞ்சேனையில் முறியடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கொலை முயற்சியில் தமிழ் தீவிரவாத இயக்கமான 'ஈரோஸ்' ஈடுபட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- நேற்றுக்காலை 6-45 மணியளவில் கொட்டாஞ்சேனை சென்லூஷியஸ் தேவாலயத்துக்கருகில் 'ஹைஏஸ்' வான் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. இதில் இருந்தவர்கள் சந்தேகத்துக்கிடமான முறையில் நடந்து கொண்டனர்.

இதனையடுத்து இவ்வாகனத்தைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் நெருங்கியபோது அதிலிருந்தவர்கள் தப்பிச்செல்ல முயற்சித்தனர் சாரதி வானில் வைத்தே பிடிபட்டார். மற்றநபர் வீதியில் வைத்து பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.



### இன்ஸ்பெக்டரின் சந்தேகம்

நேற்றுக்காலை மோட்டார் காரில் தமது பிள்ளையைப் பாடசாலையில் கொண்டு சென்று விட்டபின்னர் பொலிஸ் இன்ஸ்பெகடர் ஒருவர் கொட்டாஞ்சேனை 'சென். லூஷியஸ்' தேவாலயம் வழியாக வந்து கொண்டிருந்தார். அப்போது அத்தேவாலயம் அருகே நிறுத்தப்பட்டிருந்த 'ஹைஏஸ்' வான் ஒன்றில் இருந்த சிலர் ஏதோ ஒரு கருவியை அதன் பின் புறத்திலிருந்து பொருத்துவதை அவர் கண்டுள்ளார்.

தொடர்ந்து அவ்வான்மீது சந்தேகங் கொண்டு தமது மோட்டார் காரை நிறுத்திய பின்னர் அதனருகே அவர் சென்றுள்ளார்.

இவ்வேளை அவ்வானிலிருந்த மூவரில் இருவர் வெளியே குதித்துத் தப்பி ஓடினர். சாரதி அவ்வானில் வைத்தே பிடிபட்டார். தப்பியோடியவர்களில் ஒருவர் வீதியில் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். மற்றையவர் தலைமறைவாகியுள்ளார்.

### 120 கிலோகிராம் ஜெலிக்னைட்

தொடர்ந்து அவ்வாகனம் சோதனையிடப்பட்டபோது மொத்தம் 120 கிலோ கிராம் எடையுள்ள தனித் தனியே 50, 70 கிலோ கிராம் பைக்கட்டுகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 'ஜெலிக்னைட்' வெடிப் பொருட்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வெடிப்பொருட்கள் இந்தியத் தயாரிப்புக்கள் என்பதும் தெரிய வந்துள்ளது. அத்துடன் இவற்றை நேற்றுக் காலை 9 மணியளவில் வெடிக்கச்செய்யும் வகையிலேயே நேரமாணியும் சரிசெய்யப்பட்டு வைத்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

(7-ம் பக்கம் பார்க்க)

### ஈரோஸ் மறுக்கிறது!

(ராய்ட்டர்)

நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெறவிருந்ததாகக் கூறப்படும் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கும் 'ஈரோஸ்' இயக்கத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்று அவ்வியக்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இக்குண்டு வெடிப்புச் சம்பந்தமாக 'ஈரோஸ்' இயக்கம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மறுத்தே மேற்கண்டவாறு அவர் சென்னையில் நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கையில் அமுலில் உள்ள போர் நிறுத்தத்தை தமது இயக்கம் பூரணமாக அனுசரிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [இ]

### வில்பத்து அருகில் லொறி தீக்கிரை!

[அநுராதபுரம்]

வில்பத்துப் பகுதிப் பிரதான வீதியில் லொறி ஒன்று நேற்று தீக்கிரையாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட லொறியில் இருந்தவர்களின் நிலைமைபற்றி

(7-ம் பக்கம் பார்க்க)

### "பூட்டானில் தீர்வு ஏற்படுவது சந்தேகமே!" - லண்டனில் வாசுதேவா

(லண்டன்)

''இலங்கை இனப்பிரச்னை குறித்து இலங்கை அரசுக்கும்- தமிழ் அரசியல் பிரதிநிதிகளுக்குமிடையில் பூட்டானில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளால் தீர்வு ஏற்படுவது சந்தேகம்'' என்று நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார லண்டனில் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் தொழிற் கட்சி பாராளுமன்றத் தலைவர் திரு. டேவிட் நெலிட்டுடனான சந்திப்பின் போதே திரு நாணயக்காரா இவ்வாறு சந்தேகம் தெரிவித்தார்.

இலங்கை அரசின் ஆதரவாளர்கள் எந்த ஒரு உடன்பாட்டுக்கும் பாராளுமன்றத்தில் அங்கீகாரம் வழங்குவார்

[7-ம் பக்கம் பார்க்க]

## பயங்கரவாதம் சமாதான தீர்வை சிக்கலாக்கும்!

### இந்திய அரசு எச்சரிக்கை!

(கொழும்பு)

'பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியாது இந்த நடவடிக்கை சமாதானத் தீர்வை மேலும் சிக்கலாக்குவதாக அமையும் என்று இந்தியா தெரிவித்துள்ளது

கொழும்பில் நேற்றுக்காலை ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெறவிருந்ததாகத் கூறப்படும் குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து இந்திய உயர் ஸ்தானிகர் மூலமாக இந்தியப் பிரதமர் ரஜீவ்காந்திக்கு அறிவிக்கப்பட்டது

இதுசம்பந்தமாக இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிச்கப் பட்டிருப்பதாவதுகொழும்பில் முறியடிக்கபட்ட ஜனாதிபதி செயலக குண்டு வைப்புச் சம்பவத்தில் இந்தியத் தயாரிப்பு வெடி பொருட்களே காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த வன்முறைச் சம்பவத்துடன் இந்தியாவுக்கு எதுவித சம்பந்தமுமில்லை.

இப்பயங்கரவாத செயலை இந்தியா வன்மையாகக் கண்டிக்கிறது. வன்முறைகள் மூலம் பிரச்னைகளுக்குத் தீர்வு காணமுடியாது பயங்கரவாதச் செயல்கள் சமாதானத் தீர்வை மேலும் சிக்கலாக்குவனவாகவே அமையும்.

பிரதமர் ரஜீவ் காந்தி தெரிவித்திருப்பதற்கமைய பயங்கரவாதத்தை ஒழிக்க இந்தியா உலகநாடுகள் அனைத்துடனும் ஒத்துழைக்கும்''

இதேவேளை ஜனாதிபதி கொலை முயற்சி குறித்து இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என்.

[7-ம் பக்கம் பார்க்க]

### மக்களை அமைதியாக இருக்கும்படி வேண்டுகோள்!

[கொழும்பு]

நேற்று இடம் பெற்ற ஜனாதிபதி கொலைமுயற்சி குறித்து ஆத்திரமடைய வேண்டாமென ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்

நேற்று அவர் விசேடமாக விடுத்த செய்தியிலேயே மேற்

[7ம் பக்கம் பார்க்க]

### பழைய சோனகத் தெருவில் வாங்கியவான்!

(கொழும்பு)

நேற்றைய குண்டு வைப்பு முயற்சி சம்பந்தமாக கொழும்பில் கைது செய்யப்பட்ட வானின் சாரதி இரண்டு தினங்களுக்கு முன்புதான் தமது சாரதி உத்தரவுப் பத்திரத்தை யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

மேலும் சம்பந்தப்பட்ட இந்த 'ஹைஏஸ்' வான் புறக்கோட்டை பழைய சோனக தெருவிலுள்ள வர்த்தகர் ஒருவரிடமிருந்து வாங்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கால் நடைகளுக்கு உகந்த பெக்கூட்ரின் பவுடர் (Pecutrin pd ) மொத்த விலை- 7-50. சில்லறை விலை - 8-50. தொடர்புகொள்க: M G M. Forage Stores, 781, K K S. Rd and 208, 1st Cross Street, Jaffna. 4289

Shetna Farm B-380 சேவற் குஞ்சுகள் 13 ம் திகதி சனிக்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராசா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 4324

71ஸ்ரீ லான்ட் மாஸ்ரர் விற்பனைக்குண்டு. பார்க்க விரும்புபவர்கள் எந்நேரமும் பார்வையிடலாம் ''லங்கா மில்'', குரும்பசிட்டி, தெல்லிப்பழை. 4356

நல்ல நிலையிலுள்ள 9 ஸ்ரீ தொடர்பிலக்க பியற் கார் (128-1100இத்தாலி) விற்பனைக்குண்டு எந்நேரமும் பார்வையிடலாம். C/o Dr K. வழுதி அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை 4367

## தேவை

றேடியோ திருத்துபவர் தேவை. நேரில் காலை 8 மணி முதல் 5 மணிக்குள் வரலாம். ரெலிகோணர், மொடர்ன் மாக்கற், சாவகச்சேரி. 4159

இறைச்சிக் கோழிகள் (BROILERS) தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அண்ணா பாம், இணுவில், செம்மா தெரு, (யும்மா மொஸ்க் லேன் யாழ்ப்பாணம். தொலைபேசி: 23412. 23413 4316

எமது தொழிற்சாலையில் ஊதுபத்தி தயாரிக்க பெண் பிள்ளைகள் தேவை நேரில் வரவும். எஸ் சுப்பிரமணியம், and கொம்பனி, 34. ஆடிய பாதம்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 4357

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு வியாபார அனுபவமுள்ள விற்பனையாளர்கள் உடன் (Counter Clerks] தேவை (ஆண்கள் மட்டும்). க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்தவராயும், ஆங்கில அறிவுஉடையவராயும் முன்வேலை செய்த அனுபவத்துடனும், வயது எல்லை 20-40 வயதுக்குட்பட்டவராயும் இருததல் வேண்டும். விண்ணப்பங்களை சொந்த கை எழுத்து மூலம் 18-07-85க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 4381, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம், 4381

## வகுப்புகள்

A/L 86, 87 புவியியல், இந்து நாகரிகம் வகுப்புகள் 7 முதல் 10 வரை தமிழ், ஆங்கிலம், சமூகக்கல்வி ஆகியபாடங்களில் விபரங்களுக்கு:- ''லட்சுமி வாசம்'' 153, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. 4370

## வாடகைக்கு

கோண்டாவில் கிழக்கு, இருபாலை வீதி, தண்ணீர்த் தாங்கிக்கு முன் புதிய மாடி வீடு வாடகைக்கு உடன் உண்டு. தொடர்பு கொள்ளவும்: ந. குணநாயகம், கோண்டாவில் கிழக்கு. கோண்டாவில். 4315

## காணவில்லை

வட்டுமேற்கு, வட்டுக்கோட்டையில் வசிக்கும் வேலுப்பிள்ளை மகிழ்ராஜன் என்பவரது அடையாள அட்டை 8-7-85ல் கல்லுண்டாய் வீதியில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். 4382

மானிப்பாய் யாழ் வீதி 278-ம் நம்பர் வீட்டிலிருந்து ஏழூர் குடியிருப்பைச் சேர்ந்த யோகநாதன் ராஜேஸ் கண்ணன் என்னும் 13 வயது சிறுவன் காணமல் போய்விட்டார். இவரைப்பற்றிய தகவல் தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவலை மேற்படி விலாசத்திலோ அல்லது ஈழநாடு காரியாலயத்திலோ கொடுக்கவும் 4363

## பயிற்சி வகுப்பு

மருத்துவ தாதி பயிற்சி (Nurse Training Diploma Course) ஆரம்பமாகவுள்ளது. G. C. E. O/L, A/L சித்தியடைந்தவர்கள் 20-7-85க்கு முன் விண்ணப்பிக்கவும். அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 4321

## மணப்பந்தல்

யாழ்ப்பாண இந்து உயர் குல படித்த, மேற்கு ஜேர்மனியில் நல்ல வருமானத்தோடு வேலைசெய்யும் மணமகனுக்கு 24 வயதுக்குட்பட்ட 4-1-5-6 பிறப்பெண்ணுள்ள மணப்பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். மணப்பெண் உடனே புறப்படலாம். சாதி, மதம் கவனிக்கப்படமாட்டாது. ஞாயிற்றுக்கிழமைகளில் நேரில் சந்திக்கலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாதோட்டம், யாழ்ப்பாணம். 4342

சுவிற்செலாந்தில் 5வருடங்களாக ஐந்து நட்சத்திர ஹோட்டலில் Chief Streuward ஆக நிரந்தரமாகப் பணிபுரியும் இந்து வேளாள 26 வயதுடைய மகனுக்கு ஆங்கிலம் ஓரளவு பேசக்கூடிய படிதத நற்பண்புடைய அழகிய 23 வயதுக்குட்பட்ட உடன் சுவிற்செலாந்து செல்ல விருப்பமுள்ள மணமகள் தேவை. சாதகம், படம், கல்வி மற்றும் முழு விபரங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 4366, ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 4366

## வைத்தியம்

மெடிக்கல் சென்ரர் வைத்திய நிபுணர், ஆலோசகர் Dr செ. சந்திரதேவா (M B B S ) Madras, M. R C. Psh. (Edinbrough), D. Phm. M. (Lon.). மன நோயாளர்களுக்கும் வைத்தியம் செய்யப்படும். விஷக்கடிக்கும் வைத்தியமுண்டு. மேலதிக விபரங்களுக்கு சுபாஸ் கபேயுடன் தொடர்புகொள்க. தொலைபேசி: 22578. நீதிராஜா வீதி, கொக்குவில் மேற்கு. கொக்குவில். தவபாலச்சந்திரன் T.V. சென்ரருக்கு அருகாமையில். 4368

## சேவை

நாட்பட்ட எவ்வருத்தமானாலும் விசேஷ வைத்திய நிபுணர்களால் கைவிடப்பட்ட எவ்வித நோய்களானாலும் இறைவனின் அருளால் குணமாக்குவோம். உங்களின் எவ்விதமான தனிப்பட்ட வைத்தியப் பிரச்னைகளுக்கும் வெளிநாடுகளில் பிரபல்யம் மிக்கவர் இலவச ஆலோசனை வழங்குவார். அத்துடன் மனிதசக்தியால் குணப்படுத்த முடியாத சகலவிதமான தோஷங்களையும், பிணிகளையும் நீக்கிக் கொள்ள இயந்திரத்தகடுகள் துவாக்கள் செய்து கொடுக்கப்படும். ''சாஹிஷீபா'' ஆத்ம ஆத்ம ஆரோக்கிய நிலையம், 125, கடற்கரைவீதி, (பழைய பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில்) குருநகர், யாழ்ப்பாணம். 4380

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

வண்ணார்பண்ணை தென்கிழக்கு என்னும் இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தையா என்பவரின் மரண சாதனமில்லா மரணச் சொத்தினதும், உடமைப் பொருட்களினதும் விடயத்தில்

மரணமெய்தியவர்

வேலுப்பிள்ளை கந்தையா கைப்பெண் மனோன்மணி, இல: 100, மணிக்கூட்டுக் கோபுர வீதி, வண்ணார் பண்ணை தென் கிழக்கு, யாழ்ப்பாணம்.

மனுதார்.

வழ. இல. T/38 1

எதிராக

1. கந்தையா சுந்தரராஜன், இல 100, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம் தற்போது இங்கிலாந்து.
2. கந்தையா நடராசா, இல. 47, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
3. கந்தையா சிறிஸ்கந்தராசா, இல 100, மணிக்கூட்டுக் கோபுர வீதி, வண்ணார்பண்ணை தென்கிழக்கு, யாழ்ப்பாணம்.

எதிர்வாதிகள்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு வைகாசி மாதம் 31ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985ம் ஆண்டு தைமீ 25ந்உ. நீதிமன்ற ஆணைப்படி,

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது.

த. சங்கரப்பிள்ளை,
மனுதாரின் சட்டத்தரணி.
31-5-85.

காரணம் காட்டும் திகதி 19-7-85க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கு. குலசிங்கம்,
பதிவாளர். 4354

JAFFNA CENTRAL COLLEGE
150th ANNIVERSARY CELEBRATIONS

## O. B. A. DAY- 20th JULY, 85

| | | |
|---|---|---|
| 8-00 a. m. | — | Cricket Match |
| 9-30 a m. | — | Basket-Ball Match |
| 10-30 a m. | — | Principal's Tea |
| 11-00 a. m. | — | Soccer match |
| 12-45 p m. | — | O B A Lunch |
| 2-45 p m | — | A. G. M. |

Contact Mr K Kandasamy the organiser O B. A. Celebrations-1985, Jaffna Central College, Jaffna. Tel. No. 22572 on or before 17th July 85

S. THAVALINGAM,
O B A. Secretary.

4379

## Commerce Centre,

திருநெல்வேலி - ஆடியபாதம் வீதி.
(அம்மன் கோவில் முன்பாக)

### A/L 86, 87
### புதிய கலை வர்த்தக வகுப்புகள்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | M சின்னத்தம்பி |
| கணக்கியல் | — | S வன்னியசிங்கம் |
| வர்த்தகம் | — | D ஜெயராம் |
| அளவையியல் | — | S S மனோகரன் |
| இந்து நாகரிகம் | — | அருள்நங்கை |
| தமிழ் | — | பாலா |

ஆரம்பம் 13-07-85 மாலை 3-00 மணி

குறிப்பு: பாதுகாப்பான இடம், குறி பிட்டளவு மாணவர்களே அனுமதிக்கப்படுவர். 4365

## உருக்கமான வேண்டுகோள்

1983 ஆடி வன்செயலால் நாம் கொழும்பில் தொழில் செய்துவந்த ஸ்தாபனத்தை இழந்து பொருளாதார வகையில் பெரும் நஷ்டம் அடைந்துள்ளோம். இரு குடும்பங்கள் ஒரு பழைய இசுசு லொறியை 24ஸ்ரீ 6744) நம்பித்தான் சீவியம்செய்கிறோம். பினன்ஸ் கடனும் கட்டிவருகிறோம். யாழ்ப்பாணத்துக்குக் கூலிககுச் சாமான் ஏற்றிவந்து பறித்தபிறகு, செம்மா தெருவில் முஸ்லிம் பள்ளிக்கு அருகில் நிறுத்திவைத்திருந்தோம். தாங்கள் இயக்கம் என்று சொல்லி 1-7-85 மாலை இனந்தெரியாதவர்கள் லொறியை எடுத்துச்சென்றுள்ளார்கள். அன்றிலிருந்து நாம் படும் கஷ்டம் கொஞ்சமில்லை. எங்கள் குடும்ப நிலையைக் கருத்தில்கொண்டு லொறியை எடுத்தவர்கள் எம்மிடம் திருப்பி ஒப்படைக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

வி. சண்முகசுந்தரம் குடும்பம்,
வி. சொக்கலிங்கம் குடும்பம்,

573, மானிப்பாய் ரோட்,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

4377

NEW
## COMMERCE
## ACADEMY

B. M. C. Lane, Jaffna.

### 86, 87
### A/L Weekend Classes

கலை, வர்த்தக வகுப்புக்கள் நடைபெறுகின்றன

| | |
|---|---|
| Economics | –திரு. குமாரவேல் |
| Accounts | –திரு. மரியதாஸ் |
| Commerce | –திரு. தேவா |
| Logic | –பிரபல ஆசிரியர் |
| Tamil | –திரு. பாலா |
| Hindu Culture | –திருமதி அருள் நங்கை |

★ விபரங்கட்கு:

New Master Institute
B.M.C. Lane, Jaffna.

# லெபனானில் பாலஸ்தீனிய அகதிகள் முகாம்களில் இஸ்ரேல் குண்டு வீச்சு!

## 7 பேர் பலி! 30 பேர் காயம்!

பெய்ரூட், ஜூலை 12
லெபனானில் இரண்டு பாலஸ்தீனிய அகதி முகாம்கள் மீது இஸ்ரேல் நடத்திய விமானத் தாக்குதல்களில் குறைந்தது 7 பேர் இறந்து போனார்கள். 30 பேர் காயமடைந்தனர்.

லெபனானில் வடக்குத்துறைமுக நகரான திரிப்பொலிக்கு அருகே இச்சம்பவம் நடந்துள்ளது. பல கட்டடங்கள் தீப்பிடித்து எரிந்ததாகவும் கூறப்படுகிறது.

தெற்கு லெபனானில் உள்ள இஸ்ரேலிய பந்தோபஸ்து பிராந்தியத்தில் நேற்று நடந்த மோட்டார் கார் வெடிகுண்டு தாக்குதலைத் தொடர்ந்து இந்த தாக்குதல் இடம்பெற்றது.

அந்தக்கார் குண்டுவெடிப்பில் 17 இஸ்ரேலிய வீரர்கள் பலியானார்கள். லெபனானில் இருந்து இஸ்ரேல் தனது துருப்புக்களை விலக்கியபின் நடந்த முதலாவது தாக்குதல் இதுவேயாகும்.

லெபனான் தேசிய பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 28 வயதுப் பெண்ணும் 20 வயது வாலிபனும் தனித்தனியாக இந்த கார் குண்டுவெடிப்புகளை நடத்தி 17 இஸ்ரேலிய வீரர்களை கொன்றுள்ளனர். (க)

---

7 பணயக் கைதிகள் விடுவிக்கப்படும்வரை

## லெபனானுக்கான பொருளாதார உதவிகளை அமெரிக்கா நிறுத்தியது

பெய்ரூட், ஜூலை 12
பெய்ரூட்டில் பணயம்வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்கர்கள் விடுவிக்கப்படும்வரை லெபனானுக்கான பொருளாதார இராணுவ உதவிகளை அனைத்தையும் நிறுத்த வகை செய்யும் திருத்தமசோதா ஒன்றை அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபை (காங்கிரஸ்) ஆமோதித்துள்ளது.

குரல் வாக்கெடுப்பு மூலம் அங்கீகரிக்கப்பட்ட அந்த திருத்தம் லெபனான் நாட்டு தீவிரவாதிகள் பிடித்துவைத்துள்ள 9 ஏனைய அமெரிக்கர்கள் விடுவிக்கப்பட்டபின்னர்தான் லெபனானுக்கு நடப்பு ஆண்டுக்கான 25 லட்சம் டாலர் உதவி தொகையை பயன்படுத்தலாம் என்றும் கூறுகிறது. (க)

---

## கப்பலில் குண்டுவெடிப்பு

(வெலிங்டன்)
நியுஸிலாந்தில் கடல்பகுதியில் ஒரு கப்பலில் நிகழ்ந்த குண்டுவெடிப்புக்கு கப்பல் தகர்ந்தது. அருகிலுள்ள கட்டடங்கள் குண்டுவெடிப்பினால் அதிர்ந்தன. அந்த வெடிப்புக்களையடுத்து கப்பல் நீரில் மூழ்கியது. ஒரு சிப்பந்தி பலியானார். (க)

---

## விவசாயக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)
மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றம் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில் விவசாயக் கருத்தரங்கு ஒன்றை இம்மாதம் 16-ம் திகதி சங்கானை பொதுசன நூலகத்தில் நடத்துகிறது.

மன்றத் தலைவர் திரு பொ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும். இக்கருத்தரங்கில் விவசாய செய்முறை விளக்கங்களும் இடம்பெறும்.

---

## பஞ்சாபில் மேலும் 146 பேர் விடுதலை

புதுடில்லி, ஜூலை 12
பஞ்சாப்பில் ஆர்ப்பாட்டங்களினபோது கைதுசெய்யப்பட்ட மேலும் 146 பேர் நேற்று விடுதலைசெய்யப்பட்டார்கள். இவர்களையும்சேர்த்து கடந்த 12 நாட்களில் மொத்தம் 1282 பேர் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

கொலை, தீவைப்பு, கொள்ளை மற்றும் அரசியல் துரோகம் நீங்கலாக மற்றக் குற்றங்களுக்காக கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரையும் விடுவிப்பதென்று அரசு அண்மையில் அறிவித்த கொள்கைக்கு ஏற்ப இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (க)

---

## மாவைக்கந்தன் ஆலயத்தில் பனம்பொருள் கண்காட்சி

(மாவிட்டபுரம்)
மாவைக் கந்தன் ஆலய உற்சவத்தை முன்னிட்டு மாபெரும் பனம்பொருள் கண்காட்சி ஒன்று ஆலயத்தின் முன்பாக அமைந்துள்ள வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் 4 தினங்கள் இடம்பெறவுள்ளது.

மாவைக் கந்தன் ஆலயத்திற்கு பல பாகங்களிலிருந்தும் வரும் பக்தர்கள் பனம்பொருட்களின் ஆக்கங்களைக் கண்டு களிக்கவும், இப்பகுதி பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் ஆகியோர் பார்த்து பயன்பெறவும் இக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் ஆதரவில் இன்று முதல் அடுத்துவரும் நான்கு தினங்கள் இக்கண்காட்சி நடைபெறவுள்ளது

இதற்கான ஏற்பாடுகளை பனம்பொருள் அபிவிருத்திச் சபை தலைவர் திரு கே. நடராசா, பனம்பொருள் அபிவிருத்திச் சபை அதிகாரி திரு. யோகனதாஸ், வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திரு. மூ. சிவராசா ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

---

## புதிய பதிவாளர்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் இன்ஸ்ரிரியூட்டின் புதிய பதிவாளராக திரு என். சோமசுந்தரம் இம் மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார். (வி)

---

## புதிய கட்டிடத்தில் திருமலை பொலிஸ்நிலையம்

[திருகோணமலை]
25 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றிற்கு திருமலை பொலிஸ் நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது

புதிய பொலிஸ் நிலையம் தற்பொழுது உவர்மலையில் அதற்கென கட்டப்பட்ட நவீன கட்டடத்தில் இருந்து இயங்குகின்றது.

முன்னர் திருமலை தபால் கந்தோர் வீதியில் பொலிஸ் நிலையம் இயங்கியது. இப்பொழுது அந்த வீதியில் போடப்பட்டிருந்த போக்குவரத்துத் தடைகள் யாவும் அகற்றப்படடுவிட்டன.

பழைய பொலிஸ் நிலையக் கட்டடம் பொலிசாரால் காவல்செய்யப்பட்டு வருகின்றது.

புதிய பொலிஸ் நிலையக் கட்டடத் திறப்புவிழா எளிய முறையில் நடந்தது பொலிஸ் அதிபர் எம் லியனகே கட்டடத்தை திறந்துவைத்தார்.

---

## நஞ்சருந்தி குடும்பஸ்தர் தற்கொலை

(மாவிட்டபுரம்)
"நான் இருந்து பிரயோசனமில்லை. இறந்துவிட்டால் நல்லது" என்று கூறிய குடும்பஸ்தர் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

வசாவிளானைச் சேர்ந்த குலசேகரம்பிள்ளை இராஜேஸ்வரன் (39-வயது) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இம்மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி நா. தம்பிராசா விசாரணை நடத்தியசமயம் காலமானவரின் மனைவி முத்தம்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

காலமான எனது கணவர் மது அருந்தும் பழக்கமுடையவர் கடந்தவருடம் விவசாயத்தில் பெரும் நஷ்டமேற்பட்டு கடன்தொல்லைகள் அதிகரித்திருந்தன. இதைவிட வெளிநாடுபோவதற்கென ஒருவரிடம் 25ஆயிரம் ரூபா வாங்கி அதனையும் திருப்பிக்கொடுக்காமையால் பணம்கொடுத்தவர் பெரியபிரச்னைவரும் என்று மிரட்டி வந்துள்ளார். இதனால் அவர் மனமுடைந்திருந்தார். சம்பவதினம் மதுவெறியுடன் வீட்டுக்கு வந்தார் சாப்பிடுமாறுகூறமறுத்துகோட்டப்பக்கம்சென்று கையில்சிறியபோத்தல் ஒன்றுடன் திரும்பிவந்தவர், தான் நஞ்சருந்திவிட்டதாகவும் சொன்னார். உடன் தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றபோதும் அவர் மரணத்தை தழுவினார்.

விசாரணை முடிவில் தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது.

வசாவிளான் கிராம சேவையாளர் யோ. அருளானந்தம் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

---

## மாவை ஆலயத்தில் பாதுகாப்பு சேவை

[மாவிட்டபுரம்]
மாவை கந்தன் ஆலய உற்சவத்தில் தெல்லிப்பழை பாதுகாப்பு சேவையினர் இரவு பகலாக சிறப்பாக கடமை புரிந்து வருகின்றனர்.

பக்தர்களின் பாதுகாப்பு, வீதி ஒழுங்குகள், திருடர்களின் நடமாட்டத்தை கண்காணித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்

தெல்லிப்பழை பாதுகாப்பு சேவை தலைவர் திரு ரி சிவபாதசுந்தரம் தலைமையில் இச்சேவை இடம்பெற்று வருகின்றது.

அத்துடன் சென். ஜோன் அம்புலன்ஸ் படையினரும் ஆலய உற்சவத்தில் தினமும் சிறப்பான சேவை புரிந்து வருகிறார்கள்.

இவர்களது சேவையை சென். ஜோன் அம்புலன்ஸ் படை ஆணையாளர்கள் திரு சுகந்தன் இஞ்ஞாசித்தம்பி திரு நா. போஜன் ஆகியோர் கண்காணித்து வருகின்றனர்.

---

## திருமலையில் அரிசி விலை உயர்வு

(திருமலை)
திருமலையில் அரிசி விலை ஏறிக்கொண்டிருக்கின்றது. யுத்த நிறுத்த அறிவித்தலைத் தொடர்ந்து வெளி மாவட்டங்களுக்கு நெல் ஏற்றுமதி செய்யப்படுவதன் காரணமாகவே அரிசி விலை ஏற்றம் என்று கூறப்படுகின்றது.

கோடைகால வேளாண்மை அறுவடையைத் தொடர்ந்து தான் அரிசி விலை இறங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கோடைகால வேளாண்மை அறுவடையத் தொடர்ந்து தான் அரிசி விலை இறங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

---

## லொறி கடத்தப்பட்டது

(கிளிநொச்சி)
கிளிநொச்சிக்கு சென்று கருவாடு, செத்தல் மிளகாய் ஏற்றிக்கொண்டு வந்த தென்பகுதி லொறி ஒன்று வவனியாவிற்கு அருகாமையில் வைத்து கடத்தப்பட்டுள்ளது.

லொறியில் வந்தவர்கள் இறக்கிவிடப்பட்ட பின்னர் லொறி கடத்திச்செல்லப்பட்டுள்ளது அப்போது லொறியில் சுமார் 50,000ரூபாவுக்கு மேற்பட்ட பொருள்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

---

## அதிபர்களுக்கு முகாமைத்துவ பயிற்சி நெறி

(வவனியா)
வவனியா மாவட்டத்தினைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான முகாமைத்துவ பயிற்சி நெறி ஒன்று இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்தப்பயிற்சிநெறியில்குறிப்பிடத்தக்க அதிபர்கள் கலந்துகொண்டனர்.

வவனியா தமிழ் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி. கே நாகராஜா, செட்டிகுளம் வட்டாரக்கல்வி அதிகாரி திரு எஸ். அருளானந்தம், கல்வி அதிகாரி திரு. பி. சோமசுந்தரம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

---

## ஊர்காவல் படையினரின் அட்டகாசம்

[யாழ்ப்பாணம்]
யாழ். மாவட்டத்துக்கும் கொழும்புக்குமிடையே பொருள்கள் ஏற்றிச் செல்லும் தனியார் வாகனங்கள், அநுராதபுரம், நொச்சியாகம ஆகிய இடங்களில் ஊர்காவல் படையினரின் துன்புறுத்தல்களுக்குள்ளாவதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

முன்னரும் பலதடவை இது போன்ற சம்பவங்கள் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் லொறிகள் ஊர்காவல் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு சோதனையிடப்படுவதாகவும் பின்னர் லொறிகளில் உள்ள பொருட்களை சூறையாடுவதுடன் லொறி உரிமையாளர்களிடம் பணம் அபகரிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இப்பிரச்னை சம்பந்தமாக லொறிச் சொந்தக்காரர்கள் அரசாங்க அதிபருக்கும் புகார் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (மா)

---

## சோவியத் – சீன வர்த்தக ஒப்பந்தம்

(மாஸ்கோ)
சோவியத் யூனியனும் சீனாவும் தங்களுக்கிடையில இருதரப்பு வர்த்தகத்தைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் ஒப்பந்தம் ஒன்றில் நேற்று மாஸ்கோவில் கையெழுத்திட்டன.

சீனத்துணைப்பிரதமர் திரு. லின் அண்மையில் மேற்கொண்ட சோவியத் விஜயத்தின் போது கையெழுத்தான இந்த ஒப்பந்தத்தின்கீழ் சீனாவில் கட்டடபணி மற்றும் மறுசீரமைப்பு பணி நடவடிக்கைகளில் சோவியத் யூனியன் சீனாவிற்கு உதவியளிக்கும். பதிலுக்கு சீனா விவசாயம், மற்றும் தொழில்துறை பண்டங்களை வழங்கும். (க)

---

## போசாக்கு கருத்தரங்கு

(வவனியா]
பாடசாலை மாணவர்களுக்கான போசாக்கு உணவின் முக்கியத்துவத்தினை எடுத்து விளக்கும் வகையில் வவனியாவில் உயர்தர பாடசாலைகளில் போசாக்குஉணவு கருத்தரங்குகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திட்ட அமுலாக்கல் அமைச்சின் அனுசரணையுடன் இக்கருத்தரங்கினை வவனியா திட்டமிடல் பிரிவு நடத்தவுள்ளதாக கச்சேரி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### மணிவாக்கு

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து:

— வள்ளுவர்.

# நமது நோக்கு

## ஊரடங்கு ஒழிந்தது!

வடக்கு கிழக்கில் மீண்டும் ஒருவித அமைதி திரும்பிக்கொண்டிருப்பது என்னவோ உண்மைதான். ஆனால் இது எந்த நேரத்தில் குலைக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சமும் கூடவே இருந்துவருகின்றது.

படிப்படியாகக் குறைக்கப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் முற்றாக நீக்கப்பட்டுள்ளது. சாதாரண மக்களைப் பொறுத்தவரை இது ஒரு பெரும் நிம்மதி — ஏனென்றால் ஊரடங்குச் சட்டவேளைகளில் தவறுதலாகவும் அவசியம் குறித்தும் வெளியில் வர நேரும்போது அவர்கள் தாம் பெரும் பாதிப்புக்குள்ளாகி வந்தார்கள்.

அண்மைக்காலத்தில் பிரசவ வேதனையுற்ற பெண் ஒருவரை வெள்ளைக் கொடியுடன் காரில் ஏற்றிச் சென்ற வயோதிப சாரதி ஒருவர் யாழ் நகர் ஆஸ்பத்திரிக்கருகில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் ஓர் உதாரணம்.

அதேபோன்று கண்ணி வெடிகளின் காரணமாக ஆயுதப்படையினர் நடமாட்டங்களைக் குறைத்துக் கொண்டதால் ஊரடங்கு சட்டம் வெறும் கேலிக்கூத்தாகவேஇருந்துவந்தது.

அதிகாலையிலேயே மீன் பிடித்தல் போன்ற அன்றாட தொழில்களுக்குச் செல்லும் தொழிலாளர்களுக்கு ஊரடங்கு நீக்கப்பட்டது பெரும் ஆறுதல் கடல் கண்காணிப்பு வலயமும், அதனை ஒட்டிய கெடுபிடிகளும் விரைந்து நீக்கப்படும்என்று எதிர்பார்ப்போம்.

நாட்டின் பல்வேறு ஆயுதப்படை முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள 600க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்படுகிறார்கள் என்ற செய்தியும் வரவேற்கத்தக்கது. ஏனையவர்களும் நிபந்தனையின்றி விரைவில் விடுவிக்கப்படவேண்டும். இப்போது ஏற்பட்டு வரும் அமைதிச் சூழ்நிலைக்கு அது மேலும் உரமளிக்கக்கூடும்.

இத்தசமயம் பூநகரி, நெடுங்கேணி போன்ற இடங்களில் சிறுசிறு சம்பவங்கள் இடம்பெற்றுவருவதாகத் தகவல் கிடைக்கின்றது. சில தினங்களுக்கு முன் எண்ணெய் ரயில் ஒன்றுக்கு விஷமிகள் குண்டு வைக்க முயன்றதாக ஒரு இயக்கம் அறிவித்துள்ளது. வாகனக்கடத்தல்களும் மிக மும்முரமாக நடைபெறுகின்றன அவ்வப்போது வழிப்பறிகள், கொள்ளைகளும் நடைபெறுகின்றன.

இவைகளுக்கு யார் பொறுப்பாய் இருந்தாலும் உடனடியாக நிறுத்தப்படுவது அவசியம்.

பொதுமக்கள் இம்சிக்கப்படுவது-அவர்களின் மனம் புண்படச்செய்வது போன்ற காரியங்கள் எந்தத் தரப்பினருக்கும் உதவியாக இருக்கப்போவதில்லை.

''ராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன, நடுவில்வந்த குரங்கு ஆண்டால்தான் மக்கென்ன'' என்ற மனப்பான்மை வளர்வதற்கு இடந்தரலாகாது.

'திம்பு' பேச்சுக்கள் பற்றி இன்னமும்தெம்பு அளிக்கும் உருப்படியான தகவல்எதுவும் இல்லை இலங்கைஅரசு சார்பில் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளை பரிசீலனை செய்ய அவகாசம் தேவையென தமிழர் விடுதலைக் கூட்டணியும், தீவிரவாத இயக்கங்களின் பிரதிநிதிகளும் கூறியிருப்பதாகக் கடைசியாகக் கிடைத்த செய்திகள் மூலம் அறிகின்றோம்.

தமிழ்ப் பிராந்தியம் ஒன்றை அமைப்பதற்கும் அதனை அங்கீகரிக்க செய்வதற்கும் தமிழ்ப்பிரதிநிதிகள் உறுதியாக இருப்பதாகவும் இது விடயத்தில் அவர்களுக்கிடையில் கருத்து ஒருமைப்பாடு நிலவுவதாகவும் 'இந்து' பத்திரிகை அறிவிக்கின்றது.

இலங்கை சகல இனங்களுக்கும் உரியது. எனவே சகலரும் சகலபகுதிகளிலும் சுதந்திரமாக வாழ உரிமை உண்டு எனமிகச் சாதாரணமாகக் கூறிக்கொண்டு தமிழ் பிரதேசங்களை குறுக்கவும், தமிழர்களை அவர்தம் பிராந்தியங்களிலேயே சிறுபான்மையாக்கவும் திட்டமிட்ட குடியேற்றங்களைப் புகுத்துவதை தமிழ் மக்கள் அன்று தொடக்கமே எதிர்த்து வருகின்றார்கள். எனவே இந்த விடயத்தில் பிரதிநிதிகளுக்கிடையில் இரு கருத்துக்களுக்கு இடமிருக்கமுடியாது.

ஏனைய விடயங்களிலும் இதே ஒருமைப்பாடு ஏற்பட்டு, இந்தியா-பூட்டான் நாட்டுத் தலைவர்களின் உதவியுடன் தமிழர்கள் இங்கு அமைதியாகவும், சுதந்திரமாகவும் ஏனையவர்களோடு சரிசமமாகவும் வாழ்வதற்கு வழிகாண்பார்கள் என்று நம்புகின்றோம்.

### பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

பண்ணாகம் இளைஞர் கழகத்தின் மூன்றாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் வரும் ஞாயிற்றுக்கிழமை பண்ணாகம் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் தேசிய இளைஞர் சேவை மன்ற மாவட்ட பணிப்பாளர் திரு. ஏ நாகேந்திரன், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி செல்வி மகேஸ்வரி, பண்டிதர் ப. இராசகுரு ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

### தலைவராகத் தெரிவு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பாவனையாளர் சங்கத்தின் புனரமைப்புப் பொதுக்கூட்டம் அண்மையில் பண்டத்தரிப்பு வை, எம், சி ஏ. மண்டபத்தில் நடைபெற்ற போது சங்கத் தலைவராக வைத்தியகலாநிதி பாக்கியநாதர் அத்தனுசியார் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராக திரு. எஸ். சுந்தரமூர்த்தியும், பொருளாளராக ஏ. குலசிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்,

சீனு, பாகிஸ்தான் நாடுகளிடம் ஆயுதம் வாங்கி ——

# இலங்கை அரசு இராணுவ பலத்தை அதிகரித்துவருகிறது

## ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் குற்றச்சாட்டு

(சென்னை)

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக பெரும் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள பெருமளவு இராணுவ குவிப்பிற்கு இலங்கை அரசு ஆயத்தமாகிவருவதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்) சென்னையில் நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானிடமிருந்து நான்கு ஹெலிக்கோப்டர் வசதியுடைய போர்க்கப்பல்களை வாங்குவதற்காகவும், 60 இராணுவ அதிகாரிகள் விசேட கெரில்லா பயிற்சி பெறுவதற்காக பாகிஸ்தான் சென்றிருப்பதாகவும், இது குறித்து உடன்பாடு ஒன்றில் இலங்கை அரசு பாகிஸ்தானுடன் கையெழுத்திட்டிருப்பதாகவும், இந்த முன்னணி தெரிவித்திருக்கிறது.

சீனுவிடமிருந்து ஏராளமான துப்பாக்கிகளையும் 18துப்பாக்கி வசதியுடைய படகுகளையும், பெறுவதற்கான ஓடர் ஒன்றை இலங்கை அரசுக்கு அளித்திருப்பதாகவும் அந்தபத்திரிகைக் குறிப்பு தெரிவித்திருக்கிறது.

இப்பொழுது பூட்டானில் இலங்கை அரசு பிரதிநிதிகளுடன் பேச்சுக்களில் கலந்துகொண்டுள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இந்த சமயத்தில், இலங்கை அரசு தனது இராணுவ பலத்தை வலுப்படுத்தியிருப்பதாக குற்றம்சாட்டியிருக்கிறது.

இலங்கைஇனப்பிரச்னைக்குத்தீர்வு

# வடக்கிற்கு மட்டும் ஒரு மாகாண அமைப்பு

## இலங்கை அரசு சமர்ப்பித்தஆலோசனை

(புதுடில்லி)

இந்தியாவிலுள்ள யூனியன் பிரதேசங்கள் போனறு கல்வி, காணி, சிவில் நிர்வாகம், போக்குவரத்து போன்ற துறைகளில் மேலும் அதிக அதிகாரங்கள் கொண்ட மாவட்ட சபைகளை அமைக்க, இலங்கை அரசின் யோசனைகளில் வகைசெய்யப்பட்டுள்ளது.

அதே போல் முதலமைச்சர் தலைமையில் சட்டசபை ஒன்றுடன் கூடிய மாகாணம் ஒன்றை உருவாக்க வசதியாக வட இலங்கையில் உள்ள 4 மாவட்டங்களையும் ஒரே பிரிவாக இணைக்கும் மற்றொரு முக்கிய யோசனையையும் இலங்கை அரசுதரப்பு தெரிவித்திருக்கிறது.

பூட்டான் தலைநகரான திம்புவில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில், இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் நோக்கத்துடன் திட்டவட்டமான மேற்கண்ட இரு யோசனைகளையும் இலங்கை அரசு பிரதிநிதிக் குழு தெரிவித்திருக்கிறது

திரு. எச் டபிள்யூ ஜெயவர்த்தன தலைமையிலான இந்த குழுவினர் தெரிவித்திருக்கும் இந்த யோசனைகள் பற்றி பரிசீலிப்பதற்கு அவகாசம் அளிக்குமாறு ஈழ தேசிய விடுதலை முன்னணியும், தமிழர் விடுதலை கூட்டணியும் கேட்டுக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த இருமுக்கிய தமிழர் பிரிவுகளும், இந்த யோசனைகள்பற்றிய தங்கள் கருத்துக்களை நாளை கூறுவதாக நம்பப்படுகிறது. இதன் கருத்துக்கள் பற்றி உறுதியாகத் தெரிந்து கொண்ட பின்னர் எச். டபிள்யூ. ஜெயவர்த்தன இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் ஆலோசனை நடத்துவதற்கென கொழும்பு சென்று பின்னர் பூட்டானுக்குத் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திம்பு மாநாடு மேலும் சில நாட்கள் நீடிக்கும் எனக் கருதப்படுகிறது.

இந்தியாவில் மாநிலங்களைவிட யூனியன் பிரதேசங்கள் குறைந்த அதிகாரங்களைக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# திருக்கார்த்திகை விரதமும்

## மாவை முருகன் திருவிழாவும்

பொன். சோமசுந்தரம்

சிவபரம்பொருளின் நுதல்விழிகளில் அருட்சுடர்கள் ஆறுகத்தோன்றி, அக்கினி, வாயு ஆகிய தேவர்களால் கங்கா நதியில் சேர்க்கப்பட்டு, கங்காதேவியின் அரவணைப்பிலே சரவணப்பொய்கை சேர்ந்து, ஆறு குழவிகளாக உருவெடுத்து, கார்த்திகை மாதர் அறுவர் பாலூட்டிச் சீராட்டி வளர்க்க, அன்னை பார்வதியின் அணைப்பிலே ஆறு குழவிகளும் ஒன்றாகித் கருணைகூர் முகங்களாலும், கரங்கள் பன்னிரண்டும் கொண்ட ஒருதிருவுருவாக, உலகம் உய்ய, அசுர ஆட்சி ஒளிய, உதித்தவன் முருகப்பெருமான்

சிவமூர்த்தியிலிருந்து தோற்றியதால் 'சிவபெருமான்' எனவும் அக்கினியின் தொடர்பால் 'அக்கினிகர்ப்பன்' எனவும், கங்காதேவியின் அரவணைப்பால் 'கார்த்திகேசன்' எனவும் கார்த்திகைப் பெண்கள் உறவால் 'கார்த்திகேயன்' எனவும் உமையம்மையின் அணைப்பில் ஒன்றானவனுகையால் கந்தன்' எனவும் நலம்தரும் நாமங்களை முருகப்பெருமான் பெறுகிறான்.

முருகப்பெருமானுக்குப் பாலூட்டிச். சீராட்டி வளர்க்கும் பேறுபெற்ற புண்ணியவாதிகள் கார்த்திகைப் பெண்கள். இவர்கள்பெற்ற சிறந்த பதத்தை அடையும் குறிக்கோளில் எழுந்தவிரதம் கார்த்திகை விரதமாகும். கந்த மகா விரதங்களில் ஒன்றான இவ் விரதம் மாதந்தோறும் வருகின்ற கார்த்திகை நட்சத்திர நாளுக்கு முதல் நாளாகிய பரணியின் பிற்பகல் ஒருநேர உணவுடன் ஆரம்பித்துக் கார்த்திகைநாள் முழுவதும் உபவாசமிருந்து, அன்றிரவு துயிலாது முருகவழிபாடுகளில் கழித்து: அடுத்தநாளாகிய ரோகினியில் பாரணை அனுஷ்டிக்கும் கடின விரதமாகும்.

இவ்விரதத்தைத் தொடர்ச்சியாகப் பன்னிரண்டாண்டு அனுஷ்டித்து, ஆறுமுகன் அருள் பெற்றவர்கள் அநேகர்

நாரதமுனிவர் கார்த்திகை விரதம் அனுஷ்டித்து முனிவர்களில் முதலாய முனிவராகும் பெரும் பேறு பெற்றார் என்பதும் பிராமணன் ஒருவன், இம்மகாவிரதத்தை முறைப்படி அனுஷ்டித்து, தான் நினைத்தவற்றையெல்லாம் பெற்றுத் திரிசங்கு என்றபெயர் பெற்று உலகாளும் வாய்ப்பும் பெற்றான் என்பதும், ஒரு அரசனும், ஒரு வேடனும் இவ் விரத அனுஷ்டிப்பால, தங்கள் மறுபிறப்பில் சிறந்த கொடையாளிகளாகி, அந்திமான், சந்திமான் என்ற பெயர்களுடன் உலகாளும் பேறுபெற்றனர் என்பதும், கந்தபுராணத்தில் கந்தவிரதப்படலத்தில் அறியக்கூடியதாக உள்ளது.

கார்த்திகைத் திருநாள் முருகன் ஆலயங்கள் யாவற்றிலும் பூஜை, ஆராதனை அபிஷேகம், திருவிழா ஆகியவற்றுடன் தொன்றுதொட்டே கொண்டாடப்பட்டுவருகிறது. ஆடி மாதத்தில் வரும் கார்த்திகை நன்னாளும், கார்த்திகை மாதத்தில்வரும் திருக்கார்த்திகைத் திருநாளும் வெகுவிமரிசையாக இவ்வாலயங்களில் கொண்டாடப்பட்டு வருகின்றன

மாவை முருகன் ஆலயத்தின் ஆடி உற்சவகாலத்தில் ஆடிக் கார்த்திகை விழா பக்திசிரத்தையோடும், ஆசாரத்தோடும் கலங்காலமாக நடைபெற்று வருகின்றது. ஆலயத்தின் மூல மூர்த்தியாகிய 'காங்கேய மூர்த்தி' கடல் மார்க்கமாகத் தமிழகத்திலிருந்து வந்திறங்கிய காங்கேயன்துறை வாழ் மக்களால் அநாதி காலந் தொட்டே இத்திருவிழா சிறப்பாக நடாத்தப்பட்டு வருகிறது.

இன்று நடைபெறும் இந்த ஆடிக்கருத்திகைத் திருவிழாவில் அதிகாலையிலிருந்து மாலை வரை மூலவருக்கு அபிஷேகங்கள், சோடோபசார பூசைகள், ஆராதனைகள், சகஸ்ரநாம அர்ச்சனைகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டேயிருக்கும். மாலை 3 மணியளவில் உற்சவ மூர்த்தியாகிய மாவை. பெரிய முத்துக்குமரர். வள்ளி தேவசேன சமேதராக அணிபணிகளேந்திய அழகியகோலத்தில், சர்வலங்கார பூஷிதனாக 'கார்த்திகை மயில்' என்றழைக்கப்படும் கம்பீரமான ஓங்கார மயூர வாகனத்தில் பவனிவரும் காட்சி நெஞ்சை விட்டு நீங்காத அற்புதக்காட்சியாகும்.

காலைமுதல் பின்னிரவுவரை நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் மயிற்பீலிக்காவடி, செதிழ்காவடி, தூக்குக்காவடி, ஆட்டக்காவடி, பாட்டுக்காவடி ஆகிய பல்வேறு காவடிகளை இன்னிசை முழங்க, உறவுப்பெண்கள் யாவரும் பாற்சொம்பு, சிரம்மேல் ஏந்திவர அடியார்கள் கோஷ்டி கோஷ்டியாக எடுத்து, ஆலயத்திற்குள் சென்று தமது நேர்த்திகளைப் பூர்த்திசெய்த வண்ணமிருப்பர். உட்பிரகாரம் முற்றிலும் அடியார் கூட்டம் குடும்பம் குடும்பமாக நெய்யூற்றி மாவிளக்குப் போடுவதும் காலை முதல் இரவு வரை நிகழும் ஒரு நறுமணக் காட்சியாகும்.

## திருமண அறிவித்தல்

| மணமகன் | மணமகள் |
|---|---|
| திருநிறைச்செல்வன் | திருநிறைச்செல்வி |
| **சத்தியமூர்த்தி** | **சசிகலா** |

*12 - 7 - 85 அன்று காலை 11 மணி அளவில் பெரியோர் முன்னிலையில் திருமணம் நிறைவேறதி திருவருள் கூடியிருப்பதை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்ருேம்.*

இடம் :

**இலண்டன் விம்பிள்டன் மண்டபம்.**

| பண்டிதர் | திருமதி |
|---|---|
| மா. மாணிக்கம் | ச. நாகேந்திரா |
| தம்பதிகள் | உரும்பிராய். |

அளவெட்டி வடக்கு. 4358

## திருமண அழைப்பு

*அன்புடையீர் !*

*நிகழும் குரோதன வருடம் ஆனித்திங்கள் 29-ம் நாள் (13-07-1985) சனிக்கிழமை ஊர்காவற்றுறையில் பிற்பகல் 12 மணி முதல் 3 மணி வரையிலுள்ள சுப முகூர்த்த வேளையில்*

**மணமக்கள்:**

| | |
|---|---|
| 'தியாகராஜா'வுக்கும் (மகாலக்ஷ்மி ஏஜென்சி, வவுனியா) | மரியமலர் (றஜினி)க்கும் |

*திருமணம் செய்ய நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.*

*(புதன்கிழமை 17-ந் திகதி மணமகனில்லத்தில் வரவேற்பு நடைபெறும்)*

| | |
|---|---|
| திரு. சுப்பிரமணியமும் | திரு பாக்கியநாதரும் |
| பாரியாரும் | பாரியாரும் |
| 262, பெரிய ஒலுக்குளம், | "பாக்கிய வாசா" |
| வவனியா. | ஊர்காவற்றுறை. |

4362

## கண்காணிப்புக் குழு

(யாழ்ப்பாணம்)

உடுவில் தெற்குப் புதுமடத்தை மையமாகக் கொண்டு அதையண்மித்த பகுதியை ஒருங்கிணைத்து அண்மையில் மக்கள் கண்காணிப்புகுழு ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைவராக செ. தில்லைநாதன் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்.

---

டபிள்யு எஸ். செந்தில்நாதன், மனுதாரின் சட்டத்தரணி

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

யாழ்ப்பாணம் பிறவுண் ரோட், 38, கார்த்திகேசு விஜயரத்தினம் சண்முகநாதன் என்பவரின் மரண சாதனச் சொத்துக்களின் விடயத்தில்.

சண்முகநாதன் லோகேஸ்வரன், 38, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

—மனுதார்.

வழ. இல: தத்துவம் /3792

மேற்குறித்த இலக்கங் கொண்ட தத்துவ வழக்கு மேற்குறித்த இறந்தவரின் மரணசாதனச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இந்நீதிமன்றிற் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்றுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரும் 1985ம் ஆண்டு ஆடி மாதம் 19ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றிற்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985ம் ஆண்டு வைகாசி மாதம் 10ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி.

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

(4347)


# BECON
## STUDY CENTRE

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

**87 A/L**

| | |
|---|---|
| தூய, பிரயோக கணிதம்:- | திரு. நல்லையா |
| பௌதீகம்:- | திரு சௌந்தி |
| இரசாயனம்:- | பிரபல ஆசிரியர்: திரு செல்வா |
| தாவரவியல்:- | திரு சிவவீரசிங்கம் |
| விலங்கியல்:- | திரு. ஞானேந்திரன் |

**ஆரம்பம் 13-7-85 சனி 8-30**


## முதலாண்டு நினைவஞ்சலி



**பொன்னையா தம்பிப்பிள்ளை**

(ஓய்வுபெற்ற கலால் உத்தியோகத்தர்)

மலர்வு: 11–11–1928 உதிர்வு: 12-7-1984

தந்தையே! உம்நினைவு வந்திடும்போதெம் உள்ளம் வெம்பியே கண்ணீர் உகுக்கின்ருேம். நின்பிரிவை என்றுதான் எம்முள்ளம் எண்ணிடுதல் நின்றிடுமோ மன்ருடிச் சாந்தி பெற்றுத் தா

உங்களின் ஆத்ம சாந்துக்காக பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள், உற்ருர், உறவினர்.

செல்வராஜ் பவனம்,
செங்குந்தா வீதி
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 4348


# தமரேன் எல். சி. 60°

இப்பூச்சிநாசினி "பாயர்" ஸ்தாபனத்தாரின் ஒரு பிரத்தியேக தயாரிப்பு.

கொள்வனவு செய்வோர் தயவுசெய்து

**"பாயர்" BAYER சின்னத்தை மூடியிலும் லேபல்களிலும் கவனமாக அவதானிக்கவும்**

விலை : 100 மி. லீ. 33/–, 200 மி. லீ. 61/50, 450 மி. லீ. 125/–

## BAYER ஹேகெம் லிமிட்டெட்

தயாரித்து விநியோகிப்போர் :
ஹேகெம் லிமிட்டெட்,
400, டீன்ஸ் வீதி,
கொழும்பு - 10:

உங்கள் விநியோகஸ்தர்கள் :

| | | |
|---|---|---|
| யூனியன் ஏஜென்சிஸ், | பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ், | குளோப் ரேடர்ஸ், |
| 50 \, பலாலி வீதி, | அந்தோனிப்பிள்ளை கட்டிடம், | பசார் வீதி, |
| யாழ்ப்பாணம். | கிளிநொச்சி. | வவனியா. |

**பாயர் இரசாயனம் இலங்கையின் பெருவிளைச்சலின் உறுதுணை.**

**லதா மினி**
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-30
ரஜனி-கமல்-ஸ்ரீபிரியா
**'ஆடு புலி ஆட்டம்'**

**குமரன்**
**மினி சினிமா**
(67, ஸ்ரான்லி வீதி)
10-30, 2-30
M. G. R., பானுமதி,
சக்கரபாணி நடித்த
**மலைக்கள்ளன்**

**மேபெயர் மினி**
(கன்னாதிட்டி)
10-30 a m.
பாக்கியராஜ், ஊர்வசி,
**முந்தானை முடிச்சு**
2-30 p m
DEATH RIDES A HOR'E
Lee van cleef
(Cowboy Film)
6 00 p m
சிவாஜி-ஜெமினி-சாவித்திரி
**பாசமலர்**

**ராஜா தியேட்டர்**
யாழ்ப்பாணம்
Daily 10-30, 2-30,
4-30 p. m.
**"SPLASH"**
(color)
கடல்கன்னி பெண்ணாக
மாறும் அதிசயம்.
(கண்டிப்பாக வயது
வந்தவர்களுக்கு மட்டும்.

**சோபிகா மினி**
(ஹோட்டல் சோபிகா
மேல்மாடி
பஸ்நிலையம் முன்பாக)
தினசரி 10-30, 2-30 6-15
விஜயகாந் - விஜி
சங்கிலி முருகன்
**சாட்சி**
பயங்கர சண்டைகள்
நிறைந்த படம்

**வெலிங்டன்**
10-30 — 2-15 — 4-15
**Night Shift**

**லிடோ சினிமா**
10-30, 2-15, 5-30
கணவனை இழந்த
இளந்தாய்?
இரு ஆண் குழந்தைகள்
அவளின் இளமை அழகு?
ஒரு காமுகனிடம் சிக்கி
உயிர் துடிக்கிறாள்?
பழிவாங்கத் துடிக்கும்
இரு உள்ளங்கள்?
பாலு மகேந்திரனின்
**நீங்கள் கேட்டவை**
ஈஸ்ட்மன் கலர்
தியாகராஜன் (இருவேடம்
பூர்ணிமா, ஜெயராம்,
சில்க்சுமிதா, ஜெய்சங்கர்

**ஸ்ரான்லி மினி**
5X5 திரையில்
10-30, 2-30, 6-00
ரஜனி - சுகாஷினி
நம்பியார் - அனிதாராஜ்
தேவர் பிலிம்ஸ்
**தாய்வீடு**

**பவித்ரா மினி**
(யாழ். இந்துக்கல்லூரியடி)
10-30, 2-30, 4-30, 6-30
ADVENTURE OF
PLUMBER MATE
(Sex - Comedy]

**பாலகன்**
**வீடியோ விஷன்**
சாந்தி தியேட்டர் முன்பாக
தினசரி
10-30, 2-30, 6-30, 9-30
விஜயகாந் - ஸ்ரீபிரியா
**பார்வையின்**
**மறுபக்கம்**

**மொடேர்ண்**
**மினி சினிமா**
(ஸ்ரீலங்கா அச்சக லேன்
ராஜா தியேட்டருக்கு
அருகாமை)
ROBBERS OF THE
SACRED MOUNTAIN
ஹெலிகோப்டரில் திகிலூட்டும் பயங்கர துப்பாக்கிச்
சண்டைகள் நிறைந்த
விறுவிறுப்பான படம்

**லிபேர்ட்டி மினி**
தினசரி 10-30, 2-30,
எம்.ஜி.ஆர். - பானுமதி
**நாடோடி மன்னன்**
(புதிய பிரதி)
பிற்பகல் 6-00, 8-00
புரூஸ் லீ நடித்த
**எண்டர் த டிராகன்**
(பயங்கர கராட்டிப் படம்)

**வின்ஸர்**
வெண்திரையில்
தினசரி 10-30, 2-30,
இரவு 6-00
**GANDHI**
**காந்தி அடிகள்**
குறிப்பிட்ட சிலதினங்கள்
மட்டும்

**தேவி மினி சினிமா**
(வின்ஸர் அருகாமை)
10-30, 2-30 4-30, 6-30
9-30
தினசரி 4 காட்சிகள்
வினோத்கன்னா-ஜீனத்அமன்
பெரோஸ்கான்
நடித்த
**குருபானி**
(ஹிந்தி - கலர்)
பயங்கரச் சண்டைகள்
நிறைந்த படம்
இந்தியாவில் ஓடிய
வெள்ளி விழாச் சித்திரம்

**பருத்தித்துறை**
**மாவட்ட நீதிமன்றம்**
**பின்னுறுதிக்**
**கட்டளைபற்றிய**
**அறிவித்தல்**

மரண சாதனம் ஏதும் எழுதாது காலஞ்சென்ற புலோலி மேற்கு ஆழ்வாப்பிள்ளை கணபதிப்பிள்ளை பெண் சிவபாக்கியத்தின் சொத்து விடயமாக

இறந்தவர்.
ஆழ்வாப்பிள்ளை கணபதிப்பிள்ளை,
புலோலி மேற்கு,
மனுதார்.

T/1218

எதிர்

1. கணபதிப்பிள்ளை மாணிக்கம்
2. கணபதிப்பிள்ளை இராசரத்தினம்

இருவரும் புலோலி மேற்கு
பிரதிவாதிகள்.

மேற்குறித்த இலக்கங் கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்தபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காகக் குறித்த நீதிமன்றில் தாக்கல்செய்யப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் அல்லது ஆட்கள் எவரும் 1985ம் ஆண்டு ஆவணி மாதம் 23ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் ஏதும் இருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

1985ம் ஆண்டு ஆடி மாதம் 4ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ச நடராசா,
பதிவாளர்.

வரைவு:
**வ. கு. கணபதிப்பிள்ளை,**
மனுதாரின் சட்டத்தரணி.
4355

**நியூ சாந்தி மினி**
(யாழ். சாந்தி சினிமாவில்)
10-30, 2-30, 4-30, 6-30
**Blood Voyage**
(Strictly for Adults only)
திகிலூட்டும் பயங்கர
காட்சிகள் நிறைந்த படம்

**உஷா மினி**
(கே கே எஸ். வீதியில்
முட்டாசுக்கடை சந்திக்கும் வை. சி. சி. கு. கடை
சந்திக்கும் மத்தியில்)
தினசரி 10-30, 2-30
4-30, 6-00
Debra Blee in
**The Beach Girls**
(கண்டிப்பாக வயதுவந்த
வர்களுக்கு மட்டும்)

**லங்கா சித்தஆயுர்வேத மருத்துவக் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

## D. A. M. இறுதி வருடப் பரீட்சை

மேற்படி கல்லூரியின் இறுதி ஆண்டுப் பரீட்சை (D. A. M ) 30-8-85ல் ஆரம்பமாகும் என்றும், பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் 31-7-85க்கு முன்னம், கல்லூரிப் பதிவாளருக்கு விண்ணப்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்கொண்டு விபரங்களுக்கு கல்லூரிப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்.

127, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம். 4349

ரெருசோ ஷிப்ஸ்
# TERRAZZO CHIPS
IMPORTED

★ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLLAND)
★ அலுமினியம் தகடுகள் (18g x 16g)
★ வெள்ளைச் சீமெந்து
★ காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
★ TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்குமிடம்
Rs. 6/75-க்கு மேல்

## ற ம் ச ன் ஸ்

443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12
தொலைபேசி: 34411 — 31511

மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF
## குமுலுஸ் எஸ்




நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு
"மேற்கு ஜெர்மனி 'BASF'"
தயாரிப்பாகும்.

குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 18/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

Metropolitan

**மக்வுட்ஸ் ஸ்தாபனம்**
2 ஞானார்த்தபிரதீப மாவத்தை, த.பெ.இல-9
(முன்னாள் மருதானைறோட்) கொழும்பு - 8
தொலைபேசி; 597965——9

# வெளிநாடு
# பிரயாணம்

அமெரிக்கா, கனடா, செல்வதற்கான
சகல ஒழுங்குகளும்,
பிரான்ஸ் செல்வதற்கான சிறந்த வசதிகளும்,
குறைந்த செலவில் காலதாமதமின்றி
செய்து கொடுக்கப்படும்.
வெள்ளி, சனி, ஞாயிறு வரை

**வ. நல்லையா,**
அளவெட்டி வடக்கு - அளவெட்டி.
[3913]

# எக்ஸ்பிறஸ்
# இன்ஸ்ரிரியூட்,

THE EXPRESS INSTITUTE KOPAY

இருபாலை - கோப்பாய்.

**A/L 87** கலை, விஞ்ஞான, வர்த்தக

**புதிய வகுப்புகள்**

★ யாழ். நகரின் தலைசிறந்த ஆசிரியர்களால் ★ வசதியான நேரங்களில் ★ அமைதியான சூழலில்

**யூலை 13-ல் ஆரம்பம்**

# இன்றைய பலன்

மாதம்—ஆனி
திகதி— 28 (1985-7-12)
வெள்ளிக்கிழமை
திதி—தசமி பின் இரவுவரை
நக்ஷத்திரம்— பரணி பின் இரவுவரை

மேடம்- எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும். எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் உருவாகலாம், உடல்நலம் பாதிக்கப்படலாம், பொருளும் செலவாகும்.

இடபம்- ஒளிமயமான தினம், கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு, முதிதான சந்திப்பு ஒன்று கிடைக்கும், முதியவர் ஒருவரின் ஆதரவும் உண்டு.

மிதுனம்- சகோதரவழியால் சஞ்சலப்படக்கூடிய செய்திக்கும் இடமுண்டு, அடுத்துக் கெடுப்பதற்கு சிலர் முனைவர், கற்றதனால் பயனும் உண்டு.

கடகம்- வணிகர்களுக்கு வியாபாரத்தில் விருத்தியுண்டு, முயற்சிகள் இன்று கைகூடும், செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

சிங்கம்- தெளிந்த மனம் தெய்வசிந்தை, தேடியது கிடைக்கும், அமைதியுடன் ஆனந்த வாழ்வும் உண்டு.

கன்னி- துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். இன்று அதிக பேச்சைத் தவிர்க்கவும், வரவிலும்தடையுண்டு.

துலாம்- வாழ்க்கை இன்று மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும், குடும்பத்தில் அமைதி நிலவும், காதலருக்கு இனிப்பான தினம்.

விருச்சிகம்- தொழில்துறையில் எதிர்பாராத நஷ்டத்திற்கு இடமுண்டு, புதிய முதலீடுகளை ஒத்திவைக்கவும், மனத்திடம் வேண்டும்.

தனுசு- கலைஞர்கள் போற்றப்படுவார்கள், வெளியூர்களிலிருந்து அழைப்புக் கிடைக்கலாம், பிதாவழி தனவரவிற்கும் இடமுண்டு.

மகரம்- புதியதொழிற் குறித்து சிந்தனை உருவாகும், கூட்டுவியாபாரத்தால் முன்னேற்றமுண்டு, புதுமனை கட்டுவதிலும் சிலரது கவனம் திரும்பலாம்.

கும்பம்- புதியநண்பர்கள் உங்களை உற்சாகமாக வரவேற்வேற்பார்கள், பொருள் வரவிற்கும் இடமுண்டு, மேலிடத்து ஆதரவும் கிடைக்கும்.

மீனம்- பலவித சிந்தனையால் தாக்கப்படுவீர்கள், உடல் நலனும் சிறிது பாதிக்கப்படலாம், திரைமறைவில் மோசடி நடக்கும்.

திருமலை
வே. ரவீந்திரன்


## வேலையாட்கள் தேவை

சோடா பெட்டிகள் ஏற்றி இறக்கக் கூடிய வேலையாட்கள் தேவை. நல்ல சம்பளம் அளிக்கப்படும். உடன் வரவும்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**

31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 4372



## பதவி வெற்றிடம்

வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

### பொது முகாமையாளர்:

(அ) கல்வித் தகைமைகள்:

கூட்டுறவுப் பயிற்சியுடன் மூன்று வருடகால அனுபவமுடைய பட்டதாரி அல்லது 50 லட்சம் ரூபாவினை மொத்த விற்பனையாகக் கொண்ட வியாபார ஸ்தாபனமொன்றின் மேல் முகாமையாளர் பதவியொன்றில் 5 வருடகால அனுபவம் அல்லது இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்ளோமாவுடன் 3 வருடகால அனுபவம்.

(ஆ) சம்பளத் திட்டம்:- 500—800 / 20/5 — 30/8

(இ) வயது: 25 வயதுக்கு மேற்பட்டவராகவும் 45 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் தலைவர், வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 330 கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 18-7-85ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்,

தலைவர்,
(4373) வடமாகாண தெ. ப. பொ. கூ. ச சமாசம்.



## 2வது ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
சித்திரவடிவேல்
ஆசைப்பிள்ளை
(சித்திரன்)

அன்னை மடியில்:
1963-9-6

ஆண்டவன்
அணைப்பில்:
1983-7-12

"கவலையால் எம்மை ஆழ்க்க
மண்ணிடை வருந்தவிட்டு
வானிடை சென்றுவிட்டாய்.
விண்ணகம் ஏக இன்று
ஆண்டுகள் இரண்டாகியும்
எண்ணத்தில் மிதக்கின்றீரே
பிரிவால் வாடும்:
அன்புத்தந்தை-தாய் சகோதரிகள்,
ம. ஆசைப்பிள்ளை குடும்பம்,
நீர்வேலி சந்தி, நீர்வேலி (4378)


தாதிமாரின்

# புதிய சம்பளத்திட்டம் போதியதாக இல்லையாம்!

## தாதிமார் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் அறிவித்திருக்கும் புதிய சம்பளத்திட்டம் தாதிமார்களின் தேவைகளை பூர்த்தி செய்வதாகவோ, அவர்களது கோரிக்கைகளை நிறை வேற்றுவதாகவோ இருக்கவில்லை என்று அரசாங்க சேவைகள் ஐக்கிய தாதிமார்கள் சங்கம் தெரிவித்துள்ளது

இச்சங்கத்தின் தலைவர் வணமுறுத்தட்டுவே ஆனந்ததேரோ விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் அறிவித்திருக்கும் தாதிமார்களுக்கான புதிய சம்பளத்திட்டம் புதிதாக நியமனம் பெற்றிருக்கும் தாதிமார்களுக்கு போதியதாக இருக்கலாம். ஆனால் பல ஆண்டுகள் சேவையிலுள்ள தாதிமார்களுக்கு எந்த வகையிலும் போதியதாக இல்லை.

இதனால் அரசாங்கம் விரைவில் சகல தாதிமார்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் புதிய சம்பளத் திட்டம் ஒன்றை விரைவில் அறிவிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்

இதேவேளை கொழும்பில் 5 ஆஸ்பத்திரிகளில் 2000 க்கும் மேற்பட்ட தாதிமார்கள் நேற்று முன்தினம் முழுவதும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு பெரியாஸ்பத்திரி பொரளை சிறுவர் ஆஸ்பத்திரி, கொழும்பு தெற்கு ஆஸ்பத்திரி, அநுராதபுரம் ஆஸ்பத்திரி, ருகம ஆஸ்பத்திரி ஆகிய ஐந்து ஆஸ்பத்திரிகளிலுமே தாதிமார்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

பொரளை சிறுவர் ஆஸ்பத்திரியில் தாதிமார்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதினால் அனேகமான குழந்தைகள் சிகிச்சை பெறமுடியாமல் தவித்தனர். ஏனைய ஆஸ்பத்திரிகளிலும் இந்த வேலை நிறுத்தத்தினால் நோயாளர்கள் பாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

## 150-வது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் 150-வது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 20ந் திகதி சிறப்பாக நடைபெறவுள்ளது

இவ்விழா வினையொட்டி, கிரிக்கெட் போட்டி, வலைப் பந்தாட்ட போட்டி உட்பட பல நிகழ்ச்சிகள், ஏற்பாடாகியுள்ளன. [கெ]

## மாகாண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை தமிழர் பகுதிகளில் அதிக உரிமையை அளிக்கும்வகையில் மாற்று யோசனைகளை இலங்கைப்பிரதிநிதிகள் குழு முன்வைத்தால்தான் இந்தப் பேச்சுவார்த்தைகளில் மேலும் முன்னேற்றத்தைக் காணக் கூடியதாக அமையும் என்று அரசியல் அவதானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (ரா)

## ஆயுதப்படை முகாமாக மாற்றம்

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ஆயுதப்படையினர் முகாமாக மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

நேற்றுமுன்தினம் மேற்படி உதவி அரசாங்க அதிபர் அலுவலக தஸ்தாவேஜுகளை அப்புறப்படுத்திவிட்டு ஆயுதப்படையினர் குடிபுகுந்ததாகக் கூறப்படுகிறது

அக்கரைப்பற்று ப. நோ. கூ. சங்க கட்டிடத்தில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)


A/L 87

சனி ஞாயிறு. வகுப்பு

7-15: பிரயோககணிதம்

8-30: தூயகணிதம்

ஆரம்பம்: யூலை 14

Ravimohan
JAFFNA

(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)

4263


## ஜனாதிபதியை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### கைதானவர்கள்

இவ்வான் சே தனையிடப்பட்ட போது பிடிக்கப்பட்ட இரு இளைஞர்களின் பெயர் களும், ஸ்ரீரங்கநாதன், ஜெயக்குமார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களது சகாவான தப்பிச்சென்ற மூன்றாவது நபரின் பெயர் ரஞ்சன் என்றும் தெரிவிக்கப்பட்டது

மேலும் இவர் ஹோட்டல் ஒபரோய் குண்டு வெடிப்புச் சம்பவத்துடன தொடர்புடையவர் எனவும் கூறப்பட்டது

அத்துடன் கைதுசெய்யப்பட்டுள்ள இருவாலிபர்களில் ஒருவர் கட்டுபெத்த வளாகத்தைச் சேர்ந்த பொறியியல் மாணவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது இவர்கள் தாம் ஈரோஸ் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று விசாரணையின் போது கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### பெருஞ்சேதம்

இத்தவளை திட்டமிட்டவாறு இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருக்குமானால் பழைய பாராளுமன்றக்கட்டிடமான தற்போதைய ஜனாதிபதி செயலகம் தரைமட்டமாகியிருக்குமெனவும், அத்துடன் 200 யார் சுற்றுவட்டப் பகுதியில் பெரும் சேதம் ஏற்பட்டிருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

### ஜனாதிபதி வந்திருக்கமாட்டார்

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன சளிச்சுரம் காரணமாக ஜனாதிபதி மாளிகையில் அல்லாது தமதுவார்ட் பிளேஸ் இல்லத்திலேயே ஓய்வெடுத்து வருகிறார்

வழமையாக காலை ஒன்பது மணியளவில் அவர் காலிமுகத்திடலிலுள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு வருகை தருவதுண்டு நேற்றும் அவர் அந்நேரம அங்கு வரலாம் என எதிர்பார்த்தே அச்செயலகத்தை 9 மணியளவில் தகர்க்க திட்டமிடப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அயினும் ஜனாதிபதி தமது சுகயீனம் காரணமாக நேற்று வழமைபோல காலையில் அங்கு செல்வதைத் தவிர்த்திருந்தார் எனவும், அவர் அங்கு பயங்கரவாதிகள் எதிர்பார்த்ததுபோல் வந்திருக்கமாட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது. [கி]

## வண்ணை வீரமாகாளி அலங்காரஉற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை வீரமாகாளி அம்பாள் கோவில் எட்டுக்கை அம்பாள் அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது திருவிழா 10 தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

நாளை

## மாணவர் அமைப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள உயர்தர வகுப்பு மாணவர் பிரதிநிதிகளை ஒரே அமைப்பின் கீழ் கொண்டுவருவதற்கான கூட்டத்தொடர் நாளை சனிக்கிழமை காலை யாழ் பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது

முதலாவது கூட்டம் நடைபெற்றபோது அதில் பங்குபற்ற முடியாத மாணவர்களின் பிரதிநிதிகளையும் இக்கூட்டத்துக்குச் சமுகமளிக்குமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

மாணவர்களின் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தும் நோக்கமாக ஒரே அமைப்பின் கீழ் இயங்குவதற்கு நாளைய கூட்டத்தில் நிர்வாக சபையும் தெரிவு செய்யப்படவுள்ளதாக மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (மா)

## வில்பத்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை புத்தளத்தில் இருந்து அநுராதபுரம் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றை தடுத்து நிறுத்திய ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று அதற்குள் புகுந்து தங்களுக்குத் தேவையானவர்களைத் தேடியதாகவும், அவர்கள் அங்கு இல்லை எனத் தெரிவிக்கவே அக்கோஷ்டியினர் இறங்கிச் சென்று விட்டதாகவும் கூறப்படுகிறது.

## பயங்கர...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டிக்ஸிற் அதிர்ச்சியும்கவலையும் தெரிவித்துள்ளார் இது குறித்து பத்திரிகையாளர் மகாநாடொன்றை அவர் நேற்றுக் கூடினர். (கி)

## மக்கள் அமைதியாக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டவாறு கேட்டுக்கொண்டார்

"இக் கொலைமுயற்சி குறித்து மக்கள் கலவரமோ, ஆத்திரமோ அடையக்கூடாது. இதுசம்பந்தமாக எதுவித பழிவாங்கும் நடவடிக்கைகளிலும் இறங்கலாகாது சரியான வகையில் சிந்தித்து தற்போது இடம் பெறறுவரும் இலங்கை இனப்பிரச்னை குறித்த சமரசத்துக்கு உதவவேண்டும் என்று அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

## பூட்டானில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளா என்பது சந்தேகமே என்று கூறிய திரு நாணயக்கார தமிழ் பகுதிகளில் சிங்கள மக்களைக் குடியேற்றும் இனவெறித் திட்டம் அதிகாரபூர்வமாக இன்னும் கைவிடப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார்

தமிழ்மக்களுடன் சுமுகமான ஒரு உடன்பாடு உருவாக இது கைவிடப்படல் வேண்டும் என்று கூறினார்

இலங்கையின் எதிர்காலப் பொருளாதாரநிலை குறித்துக் கவலை தெரிவித்த திரு வாசுதேவ நாணயக்கார நாட்டின் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணப்படாவிட்டால் தென் பகுதியிலும் பெரும் எரிமலையை இலங்கை அரசு சந்திக்க நேரிடும் என்று கண்டனம் தெரிவித்தார். [ரா]

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

கடலில் பீரங்கிச் சத்தம்

## மாதகல் மீனவர்கள் கடலுக்குச் செல்வதில்லை

(பண்டத்தரிப்பு)

அரசு கடல்கண்காணிப்பு வலய சட்டத்தை தளர்த்திய பின்பும் மாதகல், சுழிபுரம் பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் தொழிலுக்கு செல்ல தயக்கம் காட்டி வருகின்றனர். இப்பகுதிகளில் மூன்று மைல் தூரத்திற்கு மீன்பிடிக்கலாம் என்று அறிவிக்கப் பட்ட போதிலும் பெரும்பாலான தொழிலாளர்கள் இதுவரை தொழிலுக்குச் செல்லவில்லை.

இக்கடற் பகுதிகளில் கடற்படை ரோந்துக் கப்பல்களினதும் பீரங்கிப் படகுகளினதும் நடமாட்டம் தொடர்ந்து இருந்துவருவதே இதற்கு காரணமாகுமென்று தெரிவிக்கப் படுகின்றது.

மோட்டார் சைக்கிள் விபத்து

## இரு சகோதரர்களில் ஒருவர் பலி!

[யாழ்ப்பாணம்]

லொறி மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு சகோதரர்கள் விபத்துக்குள்ளானதால் ஒருவர் மரணமானார். மற்றவர் படுகாயமடைந்துள்ளார். மோட்டார்சைக்கிளில் சென்றவர்களே விபத்துக்குள்ளானவர்கள்

சுன்னாகம் உடுவிலைச் சேர்ந்த கே ராஜேஸ்வரன் (31 வயது என்பவரே மரணமானவராவார் அவரது தம்பியாரான கே. யோகேஸ்வரன் (23 வயது) என்பவர் ஒரு காலும் கையும் முறிந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். காங்கேசன்துறை வீதியிலுள்ள பூநாறி மரத்தடியில் இவ்விபத்து இடம்பெற்றது. (மா)

வெலிக்கடைச் சிறையில்

# தமிழர்பிரிவைப் பார்வையிட நீதிபதிக்கு சிங்கராயர் அழைப்பு!

(கொழும்பு)

''வெலிகடைச் சிறைச்சாலையில் தமிழ் இளைஞர்கள் சிறை வைக்கப்பட்டிருக்கும் பிரிவை நீங்கள் நிச்சயம் சென்று பார்வையிட வேண்டும். அப்போது தான் உங்களால் அவர்கள் நடத்தப்படும் விதத்தை நன்கு அறிந்து கொள்ளமுடியும்'', என்று வண. பிதா ஆபரணம் சிங்கராயர் மேல் நீதி மன்ற நீதிபதி திரு. சேனநாயக்காவிடம் தெரிவித்தார்

அவசரகால சட்டத்தின் கீழ் பிதா சிங்கராயர் மீதான வழக்கு விசாரணை நேற்று கொழும்பு நீதிமன்றத்தில் இடம் பெற்றது அப்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வண பிதா சிங்கராயர் மேலும் கூறியதாவது: ''வெலிக்கடைச் சிறையில் தமிழ் இளைஞர்கள் பெரும் அவஸ்தைக்குள்ளாகியுள்ளார்கள். சித்திரவதைக்குள்ளான போது பட்டகாயங்கள் இன்றும் அவர்கள் உடம்பில் காணப்படுகின்றன

நீதிபதி அவர்களே, நீங்கள் வெலிக்கடைச் சிறையில் தமிழர்கள்சிறைவைக்கப்பட்டுள்ள பகுதியைப் பார்வையிடவேண்டும் என அழைப்பு விடுக்கிறேன். அப்போது உங்களால் நிலைமைகளை நன்கு புரிந்து கொள்ளமுடியும்.

எனது விசாரணைக்கு அப்பால் இந்த விடயத்தை இங்கு கூற நேர்ந்ததையிட்டுக் கவலையடைகிறேன்'' என்றார்.

பிதா சிங்கராயர் தொடர்ந்து கூறியதாவது: ''தமிழ் இளைஞர்கள் சிறைக்கூடங்களில் அனுபவிக்கும் உடல்ரீதியான சித்திரவதைகளில் பத்தில் ஒரு பங்கினையே என்னால் அனுபவிக்கமுடிந்தது ஆனால் உளரீதியான சித்திரவதை என்னைப் பெருமளவில் பாதித்தது.

தூஷண வார்த்தைகளுக்கு இளைஞர்கள் பழக்கப்பட்டவர்கள் ஆனால் நான் பழக்கப் படவில்லை குருவானவரும் மனிதர் தானே.

கிறிஸ்த்து ஜெஸ்தமணியில் அவஸ்தைப்படும் போது பிதாவே! முடியுமாகில் இப் பாத்திரம் என்னைவிட்டு அகலட்டும் என்று கிறிஸ்துவே வேண்டினார். அப்போது அவர் அங்கு மனித சுபாவத்தைக் காட்டினார். ஆனால் நான் கிறிஸ்த்து அல்ல, அவரைப் பின்பற்றுபவனே.

நான் எழுதியவற்றை இன்ஸ்பெக்டர் காலகே வாசித்தார். பின்னர் என்னை அவர் தூஷண வார்த்தைகளால் பேசினார். இதனால் நான் மிகவும்வேதனையடைந்து அழுதுவிட்டேன்.

நான் ஒரு அஹிம்சாவாதி; ஆனால் இன்ஸ்பெக்டர் காலகே ஒரு கடுமையான நபர். [கி]

## பாதுகாப்பு சங்கங்கள் அமைக்கப்படுவது அவசியம்!

[யாழ்ப்பாணம்]

''அன்றாட வாழ்க்கைச் செலவினத்தால் மக்கள் பாதிக்கப் பட்டிருக்கும் இவ்வேளையில் மக்கள் மத்தியில் பாவனையாளர் பாதுகாப்புச் சங்கங்கள் அமைக்கப்படுவது மிக அவசியமாகும்'' கோப்பாய் தெற்கு பாவனையாளர் பாதுகாப்புச் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய யாழ் மாவட்ட விலைக் கட்டுப்பாட்டதிகாரி திரு. கே இரத்தினம் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசும் போது, ஒவ்வோர் கிராமசேவகர் பிரிவுகளிலும் பாவனையாளர் பாதுகாபபுச் சங்கங்களைப் புனரமைப்புச்செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதால், இதற்கு மக்களின்ஒத்துழைப்பு மிக அவசியமென்றும் கேட்டுக் கொண்டார்.

முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகர் திரு. கே. எஸ். அழகரத்தினம் தமது உரையில், மக்களுக்காக செயல்படவிருக்கும் பாவனையாளர் பாதுகாப்புச் சங்கம், விற்பனையாளருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான நட்புறவை வளர்க்க உதவும் என்றும் கூறினார்.

கூட்ட முடிவில் நிருவாகிகள் தெரிவும் இடம்பெற்றது. தலைவர்: கே. எஸ்: அழகரத்தினம், துணைத்தலைவர்: ஏ வி. மயில்வாகனம், கௌரவ செயலாளர்: வி. குமாரசிங்கம், துணைச் செயலாளர்: 'சமூக இரத்தினம்' எம். கே. இளையப்பு (ஜே பி.), பொருளாளர்: ஏ சுப்பிரமணியம், நிர்வாக சபை உறுப்பினர்கள்: எஸ். கணேசன் ஆசிரியர், என். தங்கராசா, எஸ். இராசையா, எஸ். தசரதன் ஆகியோரும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பெற்றனர்.

## தெல்லிப்பழை உதவி அரச அதிபர் காலமானார்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் திரு. வெ சுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் கொழும்பில் மாரடைப்பால் காலமானார்.

லீவில் கொழும்புக்குச் சென்ற வேளையிலேயே இவர் மரணமானார்.

இவரது பூதவுடல் இன்று தெல்லிப்பழைக்குக் கொண்டு வரப்படுகிறது.

இந்திய போயிங்

## 2-வது கறுப்புப்பெட்டியும் கண்டுபிடிப்பு!

[புதுடில்லி]

கடந்த மாதம் 23-ம் திகதி அத்திலாந்திக் சமுத்திரத்தில் விபத்துக்குள்ளான எயர் இந்தியா போயிங் ''கனிஷ்கா'' வின் இரண்டாவது 'கறுப்புப் பெட்டி'யும் நேற்று மீட்கப் பட்டுவிட்டதாக அறிவிக்கப் பட்டது.

சமுத்திர நீருக்கடியில் சுமார் 2000 மீட்டர் ஆழத்திலேயே இப்பெட்டி மீட்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் முதலாவது 'கறுப்புப்பெட்டி' மீட்கப்பட்டமை தெரிந்ததே.

இப்பெட்டிகளில் பதியப் பட்டுள்ள ஒலிப்பதிவுகளை ஆராய்வதன்மூலம் 'கனிஷ்கா' விமான விபத்துக்கான காரணம் குண்டு வெடிப்பா அல்லது தொழில் நுட்பக் கோளாறு என்பதைத் தெளிவாக ஊர்ஜிதம்செய்யமுடியும் என்று அறிவிக்கப்பட்டது.

இரு கறுப்புப்பெட்டிகளும் கண்டுபிடிக்கப்பட்டது குறித்து எயர் இந்திய அதிகாரிகள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர். விரைவில் அவ்விமானக் குண்டு வெடிப்பு விசாரணைகள் துரிதப்படுத்தப்படலாமென்று அவர்கள்தெரிவித்தனர். (ரா

## வவனியாவில் கார் கடத்தல்

[வவனியா]

வவனியா-ஹொரவப்பொத்தானை வீதியிலுள்ள முதலாளி ஒருவரிடமிருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கார் ஒன்று கடத்திச் செல்லப்பட்டது

நேற்றுமுன்தினம் இரவு ஒன்பது மணியளவில் அவரது வீட்டுக்கு வந்த 4 இளைஞர்கள் அம்முதலாளியின் சாரதியிடமிருந்து திறப்பைப் பெற்றுக் காரைக் கடத்திச் சென்றனராம்

## பொலிஸ் நிலைய கட்டிடத்தில் ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கச்சேரி இலங்கை வங்கி ஓய்வூதியக்காரர்களுக்கு நாளை சனிக்கிழமை முதல் திங்கட்கிழமை வரை யாழ். பொலிஸ் நிலையக்கட்டிடத்தில் ஓய்வூதியம் வழங்கப்படும் என்று கச்சேரி உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

81-ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் ஓய்வூதியம் பெற்ற 3.00000ம் இலக்கத்திற்கு உட்பட்ட ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு நாளை காலை 9 மணி முதல் 12 மணி வரையும் ஏனைய குடிசார் ஓய்வூதியம் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியம் ஆகியன நாளை ஞாயிற்றுக்கிழமையும் ஏனையோருக்கு திங்கட்கிழமையும் ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். (மா)


## மரண அறிவித்தல்

### கந்தையா சுப்பிரமணியம்

(உதவி அரசாங்க அதிபர் தெல்லிப்பழை)

உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் 10-07-85 இல் காலமானார். இவர் காலஞ் சென்ற கந்தையா, திருமதி சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், அச்சுவேலியைச் சேர்ந்த மயில்வாகனம் - செல்லம்மா ஆகியோரின் அருமை மருமகனும், சாந்தநாயகியின் அன்புக்கணவரும், பாலசாந்தன் நியூயோர்க்), துஸ்யந்தி (இந்தியன் ஓவசீஸ் வங்கி கொழும்பு), நிமலசாந்தன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், திருமதிகள் சோதிமணி - சங்கரசிவம், செல்வமணி - பஞ்சலிங்கம், புஸ்பமணி - இராசையா, சிதம்பரநாதன் (கனடா), சோதிலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும், திருமதிகள் விமலாதேவி - வேலுப்பிள்ளை, கருணாதேவி - சிவதாஸ், பத்மதேவி - சத்தியகாந்ததம், ஆலாலசுந்தரம் (யாழ் வளாகம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 13ம் திகதி சனிக்கிழமை 12 மணியளவில் அச்சுவேலியில் நடைபெறும்.

துரையையா அவெனியு,
சன்னதி ரோட்,
அச்சுவேலி.
4391



## மரண அறிவித்தல்

### காசிப்பிள்ளை தங்கம்மா

காரைநகர் ஆலடியைச் சேர்ந்த காசிப்பிள்ளை தங்கம்மா 10 - 7 - 85 புதன் மாலை காலமானார். இவர் மணற்காடு முத்துமாரி அம்பாள் ஆலய முன்னாள் முகாமையாளர் காலம் சென்ற வை. காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும் தவராசன், தவராணி ஆகியோரின் அன்புத்தாயாரும் செல்வமணி, றியாட் மின்சார அத்தியட்சகர் கந்தசாமியின் அன்பு மாமியும் ஆவர் அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று நண்பகல் சாம்பலோடை மயானத்தில் நடைபெற்றது.

4361



## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் நாகேந்திரன்

(களஞ்சியப் பொறுப்பாளர்)
(விவசாயத் திணைக்களம், திருநெல்வேலி)

நாகலிங்கம் நாகேந்திரன் 11 - 07 - 85 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், லலிதராணியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரன் (நைஜீரியா) அவர்களின் அன்புத் தம்பியும் கனகசபை தம்பதிகளின் மருமகனும் யோகேஸ்வரி. லோகநாதன், லலிதரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [வெள்ளி] மாலை 3 - 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்: R கனகசபை,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
4392


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P.Box 49, Telegram Eelanadu, Telephone; 22389 ,24126,